மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் பஸ் ஸ்கிப் ஓவர் செய்து கொண்டிருக்கின்ற பிரச்னை இருக்கிறது. இயக்குநர் அவர்கள் பரிசீலித்து வருகிருர்கள். 10 நாட்களுக்குள் இதுபற்றி முடிவு செய்யப்படும்.

* 584 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether porters have been licenced at the long but routes terminus for the convenience of passengers in Madras City?

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். நீள் தொலைப் பேருந்து விரைவு வண்டிகள் நிற்கும் முக்கியமான பேருந்து நிலையங்களில் பயணிகளின் சாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் உரிமம் பெற்ற சுமைக் கூலிகளைத் தமிழ்நாடு போக்குவரத்துத்துறை அமர்த்தியுள்ளது.

திரு என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, இதுபோன்ற உரிமம் பெற்ற சுமைக்கூலிகள் மணங்குக்கு இவ்வளவுதான் காசு பெற வேண்டுமென்ற அட்டவணையிலிருந்தும்கூட சாதாரண மக்களிடத்தில் வற்புறுத்தி அதிகமாகக் கூலி பெறுகிருர்கள். அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் காவலரை நியமித்து ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பாலுக்குக் காவல் பூனை என்ற மாதிரி சொல்கிருர்கள். ஏற்கனவே 50 காசு என்று நிர்ணயித்து இருக்கிறேம். குறிப்பிட்ட புகார் வந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்கு அதுபற்றிக் கொண்டு வந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினு 585 அமைச்சரின் கோரிக் கைப்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sri Saranatha Perumal temple at Tirucherai.

* 586 *Q.*—Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that a Trustee has been appointed for Sri Saranatha Perumal temple at Tirucherai in Kumbakonam taluk by the Commissioner, Hindu Religious and Charitable Endowments in the month of March, 1969; and

(*b*) whether the said trustee was an existing lessee of certain portions of lands of that temple?

மாண்புமிகு திரு. கே.வி. சுப்பையா: (அ) ஆம். இந்து சமய அறக் கட்டளை ஆணையாளரின் 1969-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதி நாளிட்ட ஆணையின்படி, 3 ஆண்டுக் காலத்திற்கு கோயிலின் அறங்காவலராக திரு டி. எஸ். கோவிந்தராஜன் நியமிக்கப்பட்டார்.

(இ) மேற்சொன்ன அறங்காவலரின் நியமன நாளின்போது நிலம் தொடர்ந்து குத்தகையில் இல்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

திரு. நா. காசிராமன்: தலைவர் அவர்களே, அந்த டிரஸ்டியானவர் நியமனம் செய்யப்படும் காலத்திலே அவர்களுக்கு கோயிலுடன் எந்தவித மான தொடர்பும் இல்லை என்று சொன்னுர்கள். ஆனுல் அந்த நபர் கோயிலிலிருந்து நிலத்தைக் குத்தகைக்கெடுத்து அனுபவித்துக் கொண் டிருந்தார் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. கோயில் நிர்வாகத்தின ருடன் ஒப்பந்தம் செய்த லீஸானது கோயிலின் சம்மதத்தின்பேரில் மாற்றப்பட்டிருக்கிறதா? இப்பொழுது யார் பேரில் இருக்கிறது என்று கூற முடியுமா?